(Revised)

செ.வெ.எண். 841 நாள். 14-11-09

## செய்தி வெளியீடு – 14.11.2009

கன்னியாகுமரி மாவட்ட மீனவ கிராமங்களிலிருந்து கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு ஆழ்கடல் மீன் பிடித்தொழிலுக்கு விசைப்படகுகளில் சென்ற மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது, **'பியான் புயலில்'** சிக்கி சுமார் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணாமல் போய்விட்டார்கள் என சில நாளேடுகளிலும், ஊடகங்களிலும் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இச்செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து குளச்சல், தூத்தூர், மார்த்தாண்டம் துறை போன்ற பகுதிகளிலுள்ள மீனவ கிராமங்களிலிருந்து மீன்பிடி காலத்தில், மீனவர்கள் விசைப்படகுகளில் கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று, மாதக்கணக்கில் தங்கி அரபிக்கடலில் ஆழ்கடலில் மீன் பிடித் தொழில் செய்துவிட்டு, தங்கள் கிராமங்களுக்கு திரும்புவது வழக்கம்.

இவ்வருடமும், இதேபோன்று மீனவர்கள் மேற்படி மாநிலங்களுக்கு மீன் பிடித் தொழிலுக்குச் சென்று மீன்பிடித்து வந்துள்ளனர். சென்ற வாரம் உருவான **'பியான் புயலில்'** அரபிக்கடல் ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவப்படகுகள் புயலில் சிக்கி, மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து, தமிழக அரசு, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் யாரேனும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என உடனடியாக அறிந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டது. அதன் பேரில், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல் துறையினர் மற்றும் மீன்வளத்துறையினர் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களின் உறவினர்களைத் தொடர்பு கொண்டும், மேற்படி மாநிலங்களின் மீன்வளத்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டும் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் குறித்த தகவல்களை கேட்டறிந்ததில், 8 கிராமங்களைச் சேர்ந்த 327 விசைப்படகுகள், ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்காக மேற்படி மாநிலங்களுக்குச் சென்றதாக தெரியவந்தது. அவர்களுள், புயலின் போது 300 மீன்பிடி படகுகளில் ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அனைவரும் பத்திரமாக உள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், 16 படகுகளில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை கிடைத்த தகவல்களில், 11 படகுகள் சேதமடைந்துள்ளதாகவும், 8 மீனவர்கள் மட்டும் இப்புயல் காரணமாக காணாமல் போய் உள்ளதாகவும் தெரியவருகிறது. இது பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. காணாமல் போன மீனவர்கள் குறித்து, கடலோர காவற்படையினர் மற்றும் அந்தந்த மாநில காவல் துறையினர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் கப்பல்கள் மூலம் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து தேவையான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. எனவே, இது பற்றிய பதற்றமான செய்திகளை ஏடுகளில் வெளியிடுவதை அல்லது வாய்மொழியாகப் பரப்புவதைத் தவிர்க்க வேண்டுமென்று தொடர்புடைய அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

fm. (signature) 14/11/09
அரசு செயலாளர்
மீன்வளத்துறை

வெளியீடு

மீன்வளத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.